வைகறை புலர்ந்தது ! தாமரை மலர்ந்தது !
வையகம் ஒளி பெறவே...
வாராகி தாயே !
தயை செய்ய எழுந்தருள்வாய் !

எழுந்தருள்வாய் ! எழுந்தருள்வாய் !
எழுவரிலே சிறந்தவளே !
எழுந்தருள்வாய் ! எழுந்தருள்வாய் !
ஏழுலுகும் எழுச்சியுற !

மாமறைகள் ஓதிடவே வேதியரும் வந்தாரே !
பாடலுடன் நாரதரும் பணிந்திடவே வந்தாரே !
தேவர்களும் மூவருமே திருவடியில் நின்றாரே !
திருப்பள்ளி எழுவாயே ! வாராகி தேவியளே !

விதவிதமாய் பூக்களுடன் பக்தர்களும் வரிசையிலே !
பலபலவாய் திரவியங்கள் நீராடல் செய்திடவே !
அழகழகாய் பட்டாடை உன்னழகைக் கூட்டிடவே !
அகமகிழ்வாய் ஏற்றிடவே...வாராகி கண்மலர்வாய் !

ஞாயிறு எழுந்தாலும் ஒளிநீயே தரவேண்டும் !
திங்கள் முகத்தவளே ! திருப்பள்ளி எழுந்தருள்வாய் !
தாயிரு கைகள்போல் எமையென்றும் காத்தணைக்க...
வாராகி தாயாரே ! இப்போதே கண்மலர்வாய் !

செவ்வாய் அழகியளே ! செந்நிறத்து ஆடையளே !
இவ்வாய் பயனறிந்தோம் ! உன்நாமம் சொல்லியதால்...
எங்களின் அன்புதன் பாத்திரமே ! ஜொலிக்கின்ற ரத்தினமே !
மங்கலம் அருளிடவே ! மாதேவி எழுந்தருள்வாய் !

வியாழக் கிழமையிலே நீயேஎம் குருவாகி
ஞானம் தருபவளே ! நலமருளும் வாராகி !
வேண்டுபவர் வாழ்வினிலே வேண்டியதை சேர்க்கின்ற
விடி வெள்ளி நீதானே ! வாராகி விழித்தெழுவாய் !

வகைவகையாய் வருகின்ற பகையவரை வேரறுத்து
நகையணியாய் பூணுகிற அலங்கார பூஷணியே !

PSDPrasad Music

சிகைமுதலாய் பதம்வரையில் அருள்பூக்கும் பூரணியே !
மிகையான கருணையளே ! வாராகி எழுந்தருள்வாய் !

அன்னையளாம் லலிதாம்பாள் படைத்தலைவி ஆனவளே !
அண்டமெலாம் அதிர்ந்திடவே அவதாரம் செய்தவளே !
வென்றிடவே கிரிசக்ர ரதமேறும் நாயகியே !
பன்றிமுக தேவதையே ! பஞ்சமியே எழுந்தருள்வாய் !

கலப்பையினை கையோடு கொண்டவள்நீ எழுந்தால்தான்
நிலத்தினிலே உழுவதற்கு உழவருக்கு எளிதாகும் !
உலக்கையினை கரத்தோடு கொண்டவள்நீ விழித்தால்தான்
உணவுவகை தானியங்கள் மாவாக உருமாறும் !

தஞ்சையிலே தனியாக சன்னதியைக் கொண்டவளே !
தஞ்சமென வந்தவரை தயவோடு காப்பவளே !
அஞ்சுதலை நீக்கியேநல் ஆற்றலினைத் தருபவளே !
பஞ்சமியின் நாயகியே ! திருப்பள்ளி எழுந்தருள்வாய் !

உத்திரகோச மங்கையிலே ஆதியிலே உதித்தவளே !
சித்திர மேனியளே ! சிங்கார பேரெழிலே !
நித்திரையைக் களைந்திடுவாய் ! நித்யபூஜை ஏற்றிடவே..
உத்தமியே ! உலகாளும் நாயகியே ! எழுந்தருள்வாய் !

பள்ளூர் தலத்தினிலே பொலிவுடனே உறைபவளே !
கொள்ளை அழகுடனே மகிஷத்தில் வருபவளே !
உள்ளக் கருணையினை விழிவழியாய் சொரிபவளே !
நல்லதாய் நாள்மலர...நாயகியே கண்மலர்வாய் !

ஆஷாட மாதத்து நவராத்ரி நாட்களிலே
ஆசையுடன் பணிவோர்க்கு அருள்கின்ற போத்ரினியே !
பேசாத ஊமையையும் புகழ்பாட வைப்பவளே !
தாசனென மன்னவனும்...தண்டனிடும் தேவியளே !

நாரணனின் அவதார வாராக நாதருக்கு
பூரணமாய் துணையாகி பூமியினைக் காத்தவளே !
பார்வதியின் வடிவினளே ! பார்போற்றும் உமையவளே !
போர்குணமும் கருணையுமே கலந்தவளே ! எழுந்தருள்வாய் !

PSDPrasad Music

எழுந்தருள்வாய் ! எழுந்தருள்வாய் ! வார்த்தாளி எழுந்தருள்வாய் !
எழுந்தருள்வாய் ! எழுந்தருள்வாய் ! சங்கேதா எழுந்தருள்வாய் !
எழுந்தருள்வாய் ! எழுந்தருள்வாய் ! பஞ்சமியே எழுந்தருள்வாய் !
எழுந்தருள்வாய் ! எழுந்தருள்வாய் ! வாராகி எழுந்தருள்வாய் !

அபயக்கரம் நீட்ட அம்பிகையே ! எழுந்தருள்வாய் !
சமயத்தில் காத்தருள சமையேஸ்வரி எழுந்தருள்வாய் !
அண்டத்தில் இருளகல அரிக்ஞையே எழுந்தருள்வாய் !
தண்டநாதை தாயேநீ ! தரிசனம்தர எழுந்தருள்வாய் !

PSDPrasad Music